## கல்லூரிக் கல்வித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர் (திருமதி) ஜெ. மஞ்சுளா,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., எம்.ஃபில்., பி.எச்டி.,<br>கல்லூரிக் கல்வி இயக்குநர்,<br>கல்லூரிக் கல்வி இயக்ககம்,<br>சென்னை –06. | முதல்வர்கள்,<br>அனைத்து அரசு கலை, அறிவியல் (ம)<br>கல்வியியல் கல்லூரிகள். |

திருவள்ளுவராண்டு – 2048, வைகாசித் திங்கள் 02– ஆம் நாள்

ந.க.எண்.15255/டி5/2017 நாள்.16.05.2017

அய்யா / அம்மையீர்,

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2017–18 ஆம் ஆண்டிற்கான பொது இடமாறுதல்கள் – கலந்தாய்வு – தொடர்பாக.

பார்வை : அரசு கடித (1D) எண். 159/உயர்கல்வி (எப் 2) துறை, நாள். 11.05.2017.

*****

பார்வையில் காணும் அரசு கடிதத்தில் 2017–2018 ஆம் கல்வியாண்டிற்கு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் பொது இடமாறுதல் கலந்தாய்வு நடைபெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொது இடமாறுதலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவம் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள அனைத்து ஆசிரியர்களும் 25.05.2017 முதல் 29.05.2017 வரை இணையதளம் மூலம் இடப்பெயர்வு கோரி விண்ணப்பிக்கலாம். 08.06.2017 முதல் 10.06.2017 முடிய 3 நாட்கள் சென்னை–4, இராணி மேரி கல்லூரியில் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப்படி கலந்தாய்வு நடைபெறும்.

இடப்பெயர்வு கோரி விண்ணப்பித்தவர்களில் கலந்தாய்விற்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி தகுதியுள்ள அனைவரையும் குறிப்பிட்ட நாளில் கலந்தாய்வு மையத்திற்கு விண்ணப்பத்தின் நகலுடனும், வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள முன்னுரிமையின் அடிப்படையில் இடப்பெயர்வு கோருபவராயின் அதற்கான மூலச் சான்றுகளுடனும் நேரில் வருகை தருமாறு தெரிவிக்கும்படி அனைத்து முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை பணியாளர்கள் இக்கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விண்ணப்பப் படிவம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுடன் **www.tndce.in** எனும் இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள கலந்தாய்விற்கான விண்ணப்பத்தினை இணைய தளத்தில் பதிவு செய்து அதன் நகல் ஒன்றினை முதல்வரின் மேலொப்பம் பெற்று கலந்தாய்வின் போது எடுத்து வரவேண்டும். குறித்த காலத்திற்குள் இணையதளத்தில் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் நேரிடையாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளபடமாட்டாது.

இத்தகவலை அனைத்து ஆசிரியர்களுக்கும் தெரிவித்து, கல்லூரி தகவல் பலகையிலும் அறிவிப்பு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். கலந்தாலோசித்தல் கூட்டத்திற்கு வரும் ஆசிரியர்கள் எவ்வித பயணப்படியும் பெறத் தகுதியுள்ளவர் அல்லர் என்றும், அவர்களது சொந்த செலவிலேயே வரவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். கலந்தாய்வில் கலந்து கொள்பவர்கள் தகுதியுள்ள விடுப்புக்கு விண்ணப்பித்து வருதல் வேண்டும்.

இத்தகவலை கல்லூரி தகவல் பலகையில் அறிவிப்பு செய்வதுடன், சுற்றறிக்கை வாயிலாக அனைத்து ஆசிரியர்களுக்கும் தெரிவித்து அவர்களின் ஒப்பத்தை தவறாது பெற்று அலுவலக கோப்புகளில் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதில் குறைபாடுகள் ஏற்படின் அதற்கு சாா்ந்த கல்லூரி முதல்வர்களே பொறுப்பாவார்கள் என தெரிவிக்கலாகிறது.

இக்கடிதம் பெற்றமைக்கான பெறல் ஏற்பினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஓ.லக்ஷ்மண 16/5/17

கல்லூரிக் கல்வி இயக்குநர்

16.5.17

நகல்:

1. அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்,
2. இயக்கக அனைத்து அலுவலர்கள்.

# இணைப்பு

## 2017–18ம் ஆண்டின் கல்லூரி ஆசிரியர்களுக்கான பொது இடமாறுதல் – கலந்தாய்வு தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்

1. அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் அனைத்து பாடப்பிரிவுகளிலும் ஏற்படும் காலிப் பணியிடங்கள் குறித்து விவரப்பட்டியல் கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலும், கலந்தாய்வு மையத்திலும், அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

2. இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கு இடமாறுதல் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள், இதற்கான பதிவேட்டில் தொடர் வரிசை எண் கொடுக்கப்பட்டு, விண்ணப்பித்தவரின் பெயர், எந்த இடத்திற்கு இடப்பெயர்வு வேண்டியுள்ளார், அதற்கான காரணம் போன்ற விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, விண்ணப்பங்களின் விவரங்களை கலந்தாய்வு மையத்தின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படவேண்டும்.

3. ஒரு காலிப்பணியிடத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டிருப்பின், முன்னுரிமை அளிப்பது தொடர்பாக கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றப்படவேண்டும்.

   அ) இராணுவத்தில் பணியாற்றுவோரின் மனைவி / கணவர்.

   ஆ) முழுவதுமாக கண்பார்வையற்றோர்.

   இ) மூன்று சக்கர வாகனம் பயன்படுத்தும் உடல் ஊனமுற்றோர் அல்லது இருகால்களிலும் குறைபாடுடன் கட்டை வைத்து மெதுவாக நடக்கும் உடல் ஊனமுற்றவர்.

   ஈ) இதய அறுவை சிகிச்சை மேற்கொண்டோர், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டோர்.

   உ) கடுமையான புற்று நோயால் அவதிப்படுவோர்.

   ஊ) விதவைகள்

   எ) 40 வயதுக்கு மேற்பட்ட மணமாகாத மகளிர்

   ஏ) இரண்டாண்டுகளுக்கும் மேலாக ஒரே இடத்தில் பணியாற்றுபவர்

   ஐ) கணவன் / மனைவி பணியாற்றுபவர்களாயின் மத்திய அரசு, தமிழ்நாடு அரசு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில், கணவன் / மனைவி பணியாற்றுகிறவராயின் முன்னுரிமை வழங்கப்படும். உரிய அலுவலரிடம் பணிச்சான்று பெற்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மத்திய அரசு, தமிழ்நாடு அரசு அல்லது அரசு பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர் என்ற பாகுபாடு கூடாது.

4. கல்லூரி ஆசிரியர்களின் கணவர், மனைவி, மகன், மகள், போன்றோரின் திடீர் மரணம், விபத்து மற்றும் பெரிய அளவிலான உடல்நலக்கேடுகள், உடல் மற்றும் மன உளைச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருப்பின், இவ்வாறான நிகழ்வுகளில் இடமாறுதலுக்கான மேற்கண்ட வழி காட்டி நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டியதில்லை. சிறப்பு நிகழ்வாக அவர்களது வேண்டுகோளை ஏற்று இடப்பெயர்வு வழங்கலாம். இது குறித்து அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்ப வேண்டும்.

5. பொது நலன் அல்லது மாணவர் நலன் கருதி நிர்வாகக் காரணங்களுக்காக தேவைப்படின், இடப்பெயர்வு அளிப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர், கல்லூரி ஆசிரியர்களை இடப்பெயர்வு செய்யலாம். இத்தகைய இடமாறுதல் குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

6. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், முதல்வர் (நிலை I) முதல்வர் (நிலை II) போன்றோர்களுக்கு இடப்பெயர்வு ஆணை அரசளவில் வழங்கப்படும். நிர்வாகப் பொறுப்புள்ள மேற்காண் பதவிகளுக்கு கலந்தாய்வு முறை இல்லை.

7. பிற ஆசிரியர் பணியிடங்களான (Other teaching staff) உடற்கல்வி இயக்குநர், நூலகர்களுக்கும் கலந்தாய்வு முறையில், இடப்பெயர்வு அதிகாரியான கல்லூரிக் கல்வி இயக்குநரே மேற்கொள்ளலாம்.

8. நிர்வாக காரணங்களுக்காக செய்யப்படும் இடமாறுதல்களில் அதற்கான காரணங்களை குறிப்பிட்டு, உரிய அலுவலரால் நிர்வாகக் காரணங்களுக்காக இடப்பெயர்வு செய்யலாம்.

   i) இவ்வாறு நிர்வாகக் காரணங்களுக்காக இடப்பெயர்வு செய்யப்படுவோர் அடுத்த மூன்றாண்டுகளுக்கு இடப்பெயர்வு பெற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   ii) விருப்ப இடமாறுதல் வேண்டிப் பெற்றவர்கள், அடுத்த இரண்டாண்டுகளுக்குள்ளாக இடமாறுதல் வேண்டலாகாது. இந்த கால அளவு பதவி உயர்வு பெற்றவர்களுக்குப் பொருந்தாது.

9. நிர்வாகக் காரணங்களால் இடப்பெயர்வு செய்யப்பட்டவர்களுக்கு மனமொத்த மாறுதல் (Mutual transfer) அளிக்க இயலாது. இவர்கள் அடுத்த இரண்டாண்டுகளுக்கும் மனமொத்த மாறுதலுக்கு விண்ணப்பிக்கக் கூடாது.

10. கல்வியியல் கல்லூரிகளில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு கலை, அறிவியல் கல்லூரிகளுக்கு இடமாறுதல் தரப்படமாட்டாது.

ஜெ.மஞ்சுளா 16.5.17
கல்லூரிக் கல்வி இயக்குநர்

16.5.17

## பொது இடமாறுதல் கலந்தாய்வு – கால அட்டவணை 2017–18

| வ. எண் | கலந்தாய்வு மையம் | நாள் | நேரம் | இடப்பெயர்வில் பங்கேற்க வேண்டிய விண்ணப்பத்தார்களின் துறைகள் |
|---|---|---|---|---|
| 1 | இராணி மேரி கல்லூரி, சென்னை – 4. | 08.06.2017 | முற்பகல் 10.30 மணி முதல் 1.30 மணி வரை | தமிழ், சமஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு, உருது, அரபி, ஹிந்தி, பொருளியல், ஆங்கிலம், இசைத் துறை. |
| | | | பிற்பகல் 2.30 மணி முதல் 5.45 மணி வரை | வணிகவியல், CA, IB, E.Com, C.S., B.B.M., கூட்டுறவியல் வணிக நிர்வாகவியல், உளவியல், அரசியல் சார் அறிவியல், கல்வியியல், நுண்ணுயிரியல், காட்சி வழி தொடர்பியல். |
| 2 | இராணி மேரி கல்லூரி, சென்னை – 4. | 09.06.2017 | முற்பகல் 10.30 மணி முதல் 1.30 மணி வரை | வரலாறு, புவியியல், புவி அமைப்பியல், புள்ளியியல், சுற்றுலா, சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை, மனித உரிமைகள், இந்திய கலாச்சாரம், சமூகப்பணி, கணிதம் , இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல், பொது நிர்வாகவியல். |
| | | | பிற்பகல் 2.30 மணி முதல் 5.45 மணி வரை | உயிர் வேதியியல், கணினி அறிவியல், கணினி பயன்பாட்டியல், தகவல் தொழில் நுட்பவியல், மின்னணுவியல், உடற்கல்வி, பாதுகாப்பியல், மனிதவள மேம்பாடு, சமூகவியல், நூலகர். |
| 3 | இராணி மேரி கல்லூரி, சென்னை – 4. | 10.06.2017 | முற்பகல் 10.30 மணி முதல் 1.30 மணி வரை | இயற்பியல், இயற்பியல் மற்றும் கணினி பயன்பாட்டியல், விலங்கியல், மனையியல். |
| | | | பிற்பகல் 2.30 மணி முதல் 5.45 மணி வரை | வேதியியல், தாவரவியல், நீர்வாழ் உயிரியல், உயிரி தொழில் நுட்பவியல், ஆடை வடிவமைப்பியல், சுற்றுச் சூழ்நிலையியல், தாவர உயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல், வன உயிரியல். |

ஜெ. மஞ்சுளா 17/5/17
கல்லூரிக் கல்வி இயக்குநர்

17.5.17.